முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 735**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.10.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அண்ணலே
   ஆற்றலாக மக்களை நோக்கி வரங்கள் ஈந்து
   வரமெனும் சக்திகொண்டு உலகை மாற்ற
   வடிவேலன் என் சூட்சுமமாக விளங்கும் குரு அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமண்யர் யானும் இனிதே
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   ஆசிதனை அரங்கன் சக்தி பெருக
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் பிலவ நங்கை திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்க ஞானி அறத்தின் மூலமே
   தரணியே மாற்றம் பெறக்கூடும்
   அண்ணல் நீ தரும் உபதேசத்தின் மூலமே
   அகிலத்தார் அழியாமை பெறக்கூடும்
4. கூடி வருகின்ற ஞானசித்தர் ஆட்சிக்காலங்கள்
   குரு அரங்கன் அருளாலே சித்தியாக மாறி
   நாடெங்கிலும் ஞானவான்கள் ஆளுமைக்கு வந்து
   ஞான ஆட்சியாக உலகம் மாற்றம் பெறக்கூடும்
5. கூடுகின்ற இந்த மாற்றத்தை சுப்ரமணியப்பெருமான் யானும்
   குறைவின்றி சூட்சுமமாக நடத்தி வருக
   வருகவருக மக்களின் தொடர்பு அரங்கன் வழி
   வையகம் எங்கும் பெருகி பெருகி நிற்க
6. நிற்கவே உலக மாற்றம்
   நிலைத் தன்மைகொண்ட மக்கள்மூலமே
   அற்புதமாக ஞானலோக மாற்றமாகவும் ஞானயுகமாற்றமாகவும் நடந்தேறக்கூடும்
   அருளிய சுப்ரமணியப்பெருமான் என் ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–